உ

# இராமோதந்தம்.

3186

இது,

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம்

அ. குமாரசுவாமிப்பிள்ளை

மொழிபெயர்த்து

இயற்றியது.

செந்தமிழ்ப்பிரசுரம்—௫௬.

மதுரைத்தமிழ்ச்சங்க முத்திராசாலையிற்

பதிக்கப்பெற்றது.

1922.

இதன்விலை அணா 3.

## உபநியாசம்.

இராமபிரானுடையசரித்திரத்தை இனிதுபாராட்டிக்கூறும்நூல்கள் எத்தனையோபலவாகும். வடமொழியிலே வான்மீகராமாயணம், அத்தியாத்துமராமாயணம், போதாயனராமாயணம், பட்டிகாவியம், போசசம்பு, இரகுவமிசம் முதலிய பெருநூல்களிலும், இராமோதந்தம், பாலராமாயணம் முதலிய சிறுநூல்களிலும், தென்மொழியிலே கம்பராமாயணம், கூர்மபுராணம், இராமாயணக்கருப்பொருள், இராமாயணவெண்பா முதலிய நூல்களிலும் பெருக்கமுஞ் சுருக்கமுமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. இராமசரிதத்தைப் பராமுகமின்றிப் படிப்பாரும் பலராவர்; கேட்பாரும் பலராவர்.

இவையெல்லாவற்றுள்ளும் இராமோதந்தம் என்னும் இந்நூல் இலகுவுஞ் சுருக்கமும் இயைந்து வடமொழி பயிலும் மாணவகர்களாற் பெரும்பாலும் முதற்பாடமாகக்கொண்டு படிக்கப்பட்டுவருகின்றது. இராமோதந்தம் என்பது இராமனுடையசரித்திரம் எனப் பொருள்படும். இராம+உதந்தம்=இராமோதந்தம். இராமனுவான் புருடலக்கணமெல்லாம் பூரணமாய்நிறைந்து சகலசற்குணமும்வாய்ந்து தசரதசக்கரவர்த்தியிடம் அவதரித்த ஓரவதாரபுருடன். உதந்தம்—சரித்திரம்.

இதனைச் செந்தமிழ்நூல்படிக்குஞ்சிறுவர்களுக்கும் பயன்படும்படி மொழிபெயர்த்துச் செய்யுள்வடிவாகச்செய்யவேண்டும் என்று செந்தமிழ் நூல்களை நன்குபயின்ற பண்டிதர்சிலர் விரும்பினர். அவர் விரும்பியபடியே யாமும் மொழிபெயர்த்துப் பெரும்பாலும் விருத்தப்பாவிலே அமைத்து முடித்தாம். சில கதைகள் கம்பராமாயணத்துக்கு மாறாய் வருதலு முண்டு. சில சொன்மாலையின்பாகங்கள் செய்யுட்டொடை நோக்கி, வாளாவிடப்பட்டும் இருக்கின்றன.

அங்கிலமொழியிற்சென்ற ஆதுனிகர்சிலர் நூல்கள் செய்யுள் வடிவமாகச்செய்யப்படுதல் நன்றன்று என்றும், திரிசொற்களைவிலக்கிச் செஞ்சொற்களைச் சேர்த்து வாக்கியவடிவமாகச்செய்துமுடித்தல் நல்லது என்றும் சொல்லுகின்றனர். செய்யுள்வடிவமும் வாக்கியவடிவமும் நோக்குங்கால் வெவ்வேறாகுமா? செய்யுளிலே சிலஇடங்களிலே மோனை, எதுகை முதலியனவும், பிறவும் நோக்கி அடைமொழிகள் சேர்க்கப்பட்டிருக்கும். அவைகளை நீக்கி நோக்கும்போது தோன்றுவது வாக்கியமல்லவா? செய்யுள்போல வாக்கியவடிவமும் நினைவிலே நெடுங்காலம் நிலைபெறுமா? படிக்குந்தோறுஞ் சுவைபயப்பது யாது? செய்யுள் வடிவமேயாம்.

இங்ஙனம்,

சுன்னாகம்
துன்மதிஞு
தைமீ

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

# காண்டவகை.

பாலகாண்டம்.

அயோத்தியாகாண்டம்.

ஆரணியகாண்டம்.

கிட்கிந்தாகாண்டம்.

சுந்தரகாண்டம்.

யுத்தகாண்டம்.

உத்தரகாண்டம்.

உ

# இராமோதந்தம்.*

விநாயகவணக்கம்.

பூவின் மேம்படு வன்மிக முனிவரன் புகன்ற
காவி யந்தனைச் சுருக்கிய கட்டுரை யிராமன்
மேவு † தந்தநற் றமிழினிற் கவிதையாய் விளம்பத்
தேவ னைங்கரன் கரிமுகன் சேவடி பணிவாம்.

## பாலகாண்டம்.

1 உலக மேத்திய விச்சிர வசுவென வோதுந்
தலைமை சேர்முனி தந்திடுஞ் சிறுவர்க ளாகிக்
குலவி ராவணன் கும்பகன் னன்பெருங் குணஞ்சேர்
தலைவன் வீடணன் மூவரும் விளங்கினர் தலைநாள்.

2 ஆய மூவரும் பலபக லருந்தவ மாற்றிச்
சேய தாமரைக் கிழவனை முன்வரச் செய்து
நேய மேவிய வரமெலாம் நினைவினிற் பெற்றார்
தூய மாதவஞ் செய்தவர்க் கரியதென் சொல்லின்.

3 கூறு மாநுட ரொழிந்தவெவ் வுயிர்களுங் கொல்லா
தேறும் வாழ்க்கையைத் தருகென விராவணன் கேட்டான்
நாறும் பைந்துழாய் முடியவ னடிமலர் நண்ணி
வீறு மன்பினைத் தருகென வீடணன் கேட்டான்.

4 தேவ ரின்மையைக் கேட்டிடச் சிந்தனை செய்தும்
நாவின் மேவிய மொழிதடு மாறலை நண்ணிப்
பாவி கும்பகன் னன்றுயில் கேட்டனன் படைப்போன்
யாவுங் கேட்டன கொடுத்தவண் மறைந்தன னிமைப்பில்

---

* இதன் உரிமை (copy right) ஆக்கியோர்க்குரியது.

† உ. தந்தம்—சரித்திரம்.

5 எங்கு லத்தவர்க் குரியதென் னிலங்கையைக் குபேரன்
இங்கு வந்தா சாள்வதென் னோவென விகலிப்
பொங்கி ராவணன் படையொடும் போரிடைப் புகுந்து
சிங்க வேறெனத் தாக்கினன் குபேரனைச் செறுத்து.

6 செறுத்து வென்றபின் புட்பக விமானமுந் திறலாற்
பறித்தி லங்கைமா நகரையுந் தன்னடிப் படுத்தி
வெறுத்து நொந்திட விண்ணவர் முனிவரர்க் கின்னல்
உறுத்தி வைகின னிலங்கையி லரசிய லுஞற்றி.

7 தெரியுஞ் சிற்பநூல் வல்லவன் செய்தொழின் மனத்தாற்
புரியுங் கம்மியன் மயன்றரும் புத்திரி மந்தோ
தரியெ னுமியை யிராவணன் றன்மனை வாழ்விற்
குரிய ளாமெனக் கடிமணம் புணர்ந்தன னுவப்பால்.

8 மாது மற்றவள் வயிற்றிடை யொருமகன் வந்தான்
மீது போமுகி லாமென முழங்கலான் மேக
நாத னென்றதோர் நாமமும் வலாரியை வென்றே
ஓது மிந்திர சித்தெனு நாமமு முற்றான்.

9 தீது மேவிய ராவணன் றனதுவெந் திறலாற்
பாத லம்புவி முதலிய வுலகெலாம் பயந்து
கேத மெய்திட வென்றுபே ரழகினாற் கிளர்ந்த
மாதர் தம்மையுந் தன்பெரு வலியினாற் கவர்ந்தான்.

10 ஏசில் வேதநூல் சொல்லிய பொருள்களை யிகழ்ந்து
மாசில் வேதியர் குலமெலாம் வருந்திட வாட்டி
வாச வன்றனை மகனொடும் வந்துபோர் புரிந்து
பாச மேகொடு பிணித்தன னருஞ்சிறைப் படுத்தான்.

11 தேவர் கோமகன் றருக்களை மணிகளைத் திறல்சேர்
ஏவ லாளராற் கொணருவித் திலங்கைமா நகரின்
மேவ நாட்டினன் தேவருக் கிடுக்கணும் விளைத்தான்
பாவ காரிகள் பார்ப்பரோ பிறர்படுந் துயரம்.

12 அன்ன காலையில் வருந்திய தேவர்க ளயனைத்
துன்னி யன்னவன் கொடுமைகள் யாவையுஞ் சொன்னார்

பன்னு நான்மறைக் கிழவனுங் கேட்டுளம் பரிந்து
பின்னர் வானவர் தன்னொடும் பின்வரச் சென்றான்.

13 சென்று பாற்கடல் சேர்ந்தனன் செம்பொருள் வாய்ந்து
நன்று மேவிய பலவித துதிகளு நவின்றான்
வென்றி மாயனுந் துதிகளான் மிகமனம் மகிழ்ந்தே
இன்று நீவருங் காரணம் யாதுகொ லென்றான்.

14 செய்ய தாமரைக் கிழவனுந் தேவர்கண் முனிவர்
நைய ராவணன் செய்திடுந் தீங்கெலா நவில
ஐய வந்தன னெந்தைநின் னருள்சிறி துண்டேல்
உய்தி கூடுவங் காத்தரு ளெமையென வுரைத்தான்.

15 அந்த வாசகங் கேட்டரு ளச்சுத மூர்த்தி
மைந்த நீபயங் கொண்டது மற்றினிப் போதும்
இந்த வானவர் தம்மொடுஞ் செல்லுதி யாமே
சிந்தை நொந்திடுந் தேவரைப் புரப்பது திண்ணம்.

16 வெய்ய ராவணற் கொன்றிட விரைவினில் யாமும்
வையங் காத்திடுந் தசரதன் மைந்தனாய் வருவேம்
பொய்ய னாமவன் றன்னொடும் போர்புரி காலைத்
துய்ய வானவ ரெமக்கருந் துணைசெயும் பொருட்டு.

17 ஒன்றுந் தத்தம கூறுக ளூற்றிடப் புவியிற்
றுன்றும் வானர வடிவொடுந் தோன்றிடக் கடவர்
என்று நாரணன் பிரமனுக் கியம்பினன் மறைந்தான்
அன்று வானவர் பின்வரப் பிரமனு மகன்றான்.

18 பின்ன ரிந்திரன் வாலியைப் பெற்றனன் வலிமை
துன்னு சுக்கிரீ வன்றனைச் சூரியன் பெற்றான்
அன்ன வாயுவு மநுமனைப் பெற்றன னதற்கு
முன்னர் நான்முகன் றந்திடச் சாம்பவன் முளைத்தான்.

19 ஏனை வானவ ரேனைய குரங்குக ளாகி
மாநி லத்திடை வந்தனர் வாலியக் குரங்குச்
சேனை காவல னாகியே சென்றுகிட் கிந்தை
ஆனை மாமலை வைகின னரசியல் செலுத்தி.

20 அன்ன காலையி லயோத்திவாழ் தசரத னென்னும்
மன்னன் கோசலை சுமித்திரை மாதுகை கேயி
என்னு மூவருந் தேவிய ரென்னினும் புதல்வர்
இன்மை நாடியே யிருந்துயர்ப் பெருங்கடற் படிந்தான்.

21 உரிய மந்திரி சுமந்திர னுரைத்தசொற் படியே
அரிய வன்கலைக் கோட்டுமா முனிவனை யழைத்துக்
குருவ சிட்டனுங் கூடிடக் குமரரைப் பயக்கும்
பெரிய வேள்வியைத் தசரதன் பிழையறச் செய்தான்.

22 உற்ற வேள்வியி லவியொடு முதித்தொரு பூதம்
கொற்ற வன்கரத் தவியினைக் கொடுத்துநீ யிதனை
உற்ற தேவியர் மூவர்க்கு முதவெனச் சொல்லி
மற்ற வேள்வியிற் கொம்மென மறைந்ததை யன்றே.

23 மன்ன னீந்திட வவியினை மனைவிய ருண்டே
அன்ன காலமற் றவன்றனுற் கருவினை யடைந்தார்
பின்னர் நாளடைந் திராமனைக் கோசலை பெற்றாள்
பன்னு கேகயன் புதல்வியும் பரதனைப் பெற்றாள்.

24 இகலி லக்குவன் சத்துருக் கன்னென யாரும்
பகர வந்திடு மிருவரைச் சுமித்திரை பயந்தாள்
மகித லந்தனின் மைந்தர்க ணால்வரும் வளர்ந்து
சகல கல்வியும் வல்லராய்த் தயங்கின ரன்றே.

25 ஓது மென்பெரு வேள்வியை யூறுக ளகற்றிப்
பாது காத்திட விராமனைத் தருகெனப் படைக்கைக்
காதி காதலன் கோசிகன் கடிதவ ணடைந்து
தாதை யாகிய தசரதன் றன்னிடங் கேட்டான்.

26 உரிய மைந்தனைப் பிரிந்திட வுளமில னேனுங்
குருவின் வாசக மறுப்பதற் கஞ்சினன் கொடுபோய்
எரிகொள் வேள்வியைக் காக்குமா றிலக்குவ னோடுங்
கரிய மைந்தனைக் கோசிகன் கரத்தினிற் கொடுத்தான்.

27 கொடுத்த மைந்தரைக் கோசிகன் கொண்டுபோய் வெற்றி
அடுத்த பல்வகை வித்தைக ளளித்தன னிராமன்

தடுத்து வந்தெதிர் தாடகை தனைமுனி சொல்லால்
வடித்த வம்புதொட் டாருயிர் நீத்திட வதைத்தான்.

28 கருது மைந்தர்க டம்மொடுங் காமனுச் சிரமம்
மருவிக் கோசிகன் மகஞ்செய வரக்கரும் வந்தார்
வருசு வாகுவைப் பிறர்தமை வதைபுரிந் திராமன்
எரிகொள் வேள்வியைக் காத்தன னிலக்குவ னோடும்.

29 காக்கும் வேள்வியை முடித்தபின் காளைய ரோடும்
ஆக்கு மாதவக் கோசிக னணிமதின் மிதிலை
நோக்கி யேகினன் வழியிடை நூதன மாகப்
பார்க்கு மாறொரு கல்லுருக் கிடந்தது படிமேல்.

30 காணுங் கல்லினை யிராகவன் கழலடிப் பொடியால்
நாணும் பெண்ணுரு வாக்கியீ தென்னென நன்மை
மாணுங் கோசிகன் மற்றிவள் கோதமன் மனைவி
பேணுங் கற்பிழந் திவ்வுருப் பெற்றன ளென்றான்.

31 அந்த மாதினை யம்முனி யிடத்தினி லருளி
முந்து மூவரு மிதிலையை யடைந்தனர் முன்னே
வந்த வில்லினை யிராகவன் வளைத்தனன் சனகன்
சிந்தை கொண்டனன் சீதைதன் றிருமணச் செய்கை.

32 தூதர் மாமணச் செய்தியைச் சென்றனர் சொல்லத்
தாதை யாகிய தசரதன் முதலியோர் தாமும்
ஓது மற்றைய வேந்தரும் பிறரும்வந் தொருங்கு
நீது நீங்கிய மிதிலைமா நகரியிற் சேர்ந்தார்.

33 அநக னாகிய ராமனு மங்கிசான் றாகச்
சனகன் மாமகள் சீதையை வேட்டனன் றங்கள்
மனமு வந்திடு மங்கையர் மூவரை யிளைய
புனிதர் மூவரும் வேட்டனர் தனித்தனி பொருந்தி.

34 வேட்ட மைந்தருந் தந்தையு மிதிலையிற் சனகன்
பூட்டு மன்பினுக் குரியராய்ச் சிலபகல் போக்கிக்
கூட்ட மெய்திய கொடிமதி லயோத்தியை யெண்ணி
ஈட்ட மாகிய கிளையொடு மெழுந்தனர் போனார்.

35 எழுந்து போதரும் வழியிடை யெதிர்ந்துதன் வீரம்
மொழிந்து தோன்றிய பரசுரா மன்வலி முற்றும்
அழிந்து போதரா விராகவன் வென்றன னயோத்திச்
செழுந்த ராதலம் யாவரு மடைந்தனர் சென்று.

36 வனிதை சீதையோ டிராகவன் மனமகிழ் வாகி
* வினிதை வாழுநாண் மாமனைக் காணுதல் வேண்டி
நனிது லங்கிய கேகய நாட்டினை நோக்கி
இனிது சென்றனன் பரதன்மற் றிளவலும் போனன்.

---

# அயோத்தியாகாண்டம்.

---

37 எவ்வர மெனினு மீவேன் வரமிரண் டென்ன முன்னம்
தெவ்வலி யடக்கும் வேந்தன் செப்பிய வார்த்தை யெண்ணி
அவ்வர மிரண்டுங் கேட்க வமைந்துகை கேயி நின்றாள்
கைவருஞ் சூழ்ச்சி மிக்க கடியவள் கூனி சொல்லால்.

38 காட்டினிற் போக வேண்டுங் கரியவன் பரத னிந்த
நாட்டினை யாள வேண்டு நவிலுமிவ் வரமி ரண்டும்
வேட்டிடு கின்றே னின்றே தந்தரு ளென்று வேந்தைக்
கேட்டன ளிரக்க மில்லாக் கேகயன் புதல்வி மாதோ.

39 வேந்தனும் வரங்கொ டுத்தான் வீரனு மதனைக் கேட்டு
வாய்ந்திடுங் காடு செல்ல வழிக்கொளும் போதிற் சீதை
தோர்ந்துடன் வருவே னென்று சேர்ந்தன ளிளைய கோவும்
சேர்ந்தனன் மூன்று பேருஞ் சென்றனர் கான நோக்கி.

40 நாடுகள் கடந்து வந்த நதிகளுங் கடந்து கங்கை
கூடுறுஞ் சிருங்கி பேரக் கோநகர் சென்று வைகி
நீடுறுங் கங்கு லொன்று நீத்தனர் குகனென் றேதும்
வேடுவ னன்பிற் செய்த மெய்வழி பாடு கொண்டே.

---

* வினிதை—அயோத்தி.

41 இனியிவ ணிருக்கை கொண்டா லெம்மவர் வருவ ரென்று
குனிதரும் வரிவில் வேடன் குகன்கொண ரோட மேறிப்
பனிதருங் கங்கை நீங்கிப் பாங்கினிற் பரத்து வாச
முனிவரன் சாலை நண்ணி முன்விருந் தாகி நின்றார்.

42 உத்தமன் பரத்து வாச னோதிய வார்த்தை கொண்டு
சித்திர கூட மென்னுந் திருமலை யடைந்தா ரந்தப்
புத்திரன் செய்கை கேட்டுப் பூபதி யுடலம் விட்டான்
அத்திரு நகர மெல்லா மழுகுரன் மலிப மாதோ.

43 கிட்டிய குருவின் வாக்காற் கெழுமிய வமைச்சர் மன்னர்
சட்டகம் பழுது றாது தைலத்தின் மாட்டி வைத்துப்
பட்டுள கருமந் தேறப் பரதனோ டிளவ லுக்கு
விட்டனர் தூதர் தம்மை விரைவினில் வருக வென்று.

44 தூதுவர் வார்த்தை கேட்டுச் சுமித்திரை புதல்வ னோடும்
போதரும் பரதன் வந்து புகுந்தன யாவுந் தேர்ந்து
தாதையா ருடலந் தன்னைத் தைலத்தி னின் றெடுத்துப்
பேதமில் கிரியை யெல்லாம் பிழையறச் செய்த பின்னர்,

45 தாதையைத் துயரிற் போக்குந் தாயினைக் கடிந்து கூறி
மேதினி யாளு கென்று வெண்டும்வா சகமு நீக்கிக்
கோதறு மாசில் வைக விராமனைக் கொணரு மாறு
மாதுய ரத்தி னோடும் வனநெறி மருவி னானே.

46 சித்திர கூடஞ் சென்று தேவியு மிளைய கோவை
அத்தனை யணுகிக் கண்டா னடைந்தகா ரியமுஞ் சொன்னான்
அத்தனு மவனை நோக்கி யையநீ வந்த செய்கை
எத்திற மென்ன வுன்னை யான்கொடு போக வென்றான்.

47 யாதுரை செயினுங் கொள்ளே னேழிரு வருட மீண்டே
தாதைசொல் வழாமல் வாழ்ந்து தனிநகர் பின்பு சேர்வேன்
போதுமந் நாள்வ ரைக்கும் போய்ப்புவி யாளு கென்று
பாதுகை யிரண்டு மீந்தான் பரதனும் பெற்று வந்தான்.

48 தந்தபா துகையி ரண்டுந் தனித்துணை யாகக் கொண்டோன்
நந்தியங் கிராமம் வைத்து நானிலங் காவல் பூண்டான்
முந்தியம் மலையி ருந்தோர் மூவரு மத்தி ரிப்பேர்
அந்தண னிருக்கை யெய்தி யதிதிபூ சனையும் பெற்றார்.

---

## ஆரணியகாண்டம்.

---

49 அத்திரி முனிவன் வைகு மாச்சிர மத்தை நீங்கித்
தத்துநீர் மிக்க சோலைத் தண்டகா ரணியம் புக்கு
மெய்த்தவ ருறையுஞ் சாலை வேறுவே றாகப் போகி
அத்தவ ரருளும் பெற்றா ரகத்திய னருளும் பெற்றார்.

50 குடமுனி யிடத்தி ராமன் குனிசிலை யாதி தெய்வப்
படைகளும் பெற்று நண்பின் பண்புறு சடாயு வின்பால்
மடநலா டனைப்பு ரக்கும் வாக்கையும் பெற்றுப் பஞ்ச
வடியெனு மிடத்திற் போனான் மற்றவ ரோடு மாதோ.

51 வாவிநீர் சூழும் பஞ்ச வடியிடைத் தனது கையால்
ஆவிபோன் றினிய தம்பி யாக்கிய பன்ன சாலை
தேவியுந் தானு மாகச் சென்றுவீற் றிருந்தா னென்ப
தேவர்தந் துயர நீக்கத் திருவவ தாரஞ் செய்தோன்.

52 ஆயிடை வைகு நாளி லரக்கிசூர்ப் பநகை யென்னுந்
தீயவள் வந்து கண்டு செம்மலை யிச்சை கொண்டாள்
ஆயவன் மறுத்தான் பின்ன ரநுசனும் வெறுத்து நீத்தான்
போயவள் சிறிது தூரம் பொருக்கென மீண்டும் புக்காள்.

53 சீதையைப் பற்றிச் செல்லத் தீயவ டோடா வன்னாள்
காதொடு மூக்குஞ் சிந்தக் கடிந்தன னிளைய கோமான்
பாதகி சென்று சொல்லப் படையொடு கரனும் வந்தான்
தீதுறு மவனை மற்றைத் தீயரோ டிராமன் கொன்றான்.

54 தீயவள் சோகத் தோடுஞ் சென்றுதென் னிலங்கை யாளும்
நாயக னிராவ ணற்கு நடந்தவை யாவுஞ் சொன்னாள்

தீயவன் யாவுங் கேட்டான் சீதைமே லிச்சை கொண்டு
மாயமா ரீசன் றன்னை வருகநீ துணையா வென்றான்.

55 மா னுரு வெடுத்துக் கொண்டு மாயமா ரீசன் சென்று
சானகி முன்னே நிற்பச் சானகி யீது பொன்னின்
மானிதை நீபி டித்துத் தருகென வாஞ்சை கொண்டு
கோனடி பணிந்து கேட்டாள் கோனுமங் கதன்பின் போனான்.

56 போனவன் கைக்கெட் டாமற் பொன்னின்மான் போத லோடும்
யானிது பிடித்தற் கொல்லா தென்றவன் சரத்தால் வீழ்த்த
மானது சீதா லக்கு மணாவென வுரைத்த சொல்லைச்
சானகி கேட்டு நோவத் தம்பியும் பின்பு போனான்.

57 தம்பியும் போன பின்பு சானகி தனிய ளாகி
இம்பரில் வைகுங் காலை யிராவணன் றுறவி வேடம்
நம்புறக் கொண்டு சென்று நங்கையைக் கவர்ந்து செல்ல
உம்பரிற் சடாயு கண்டங் குருத்தவ னெதிர்ந்தா னன்றே.

58 தாக்கியங் கெதிர்ந்து நின்ற சடாயுவைச் சிறகு போக
நீக்கியிந் நிலத்தில் வீழ்த்தி நெட்டக மிலங்கை புக்குப்
பூக்கம ழசோகங் காவிற் பூவையை யிருக்க விட்டுக்
காக்குமா றினிது வைத்தான் கடியசொல் லரக்கி மாரை.

59 பொன்னின்மா னதன்பின் போன பூபதி தம்பி வந்து
சொன்னவா சகங்கள் கேட்டுத் துயர்ப்பெருங் கடலின் மூழ்கிப்
பன்னசா லைக்கண் வந்து பாவையைக் காணா னாகி
இன்னலுற் றழுங்கி நின்றா னிருவருந் தேட லுற்றார்.

60 இருவருந் தேடுங் காலை யிறகற்று வலியுங் கெட்டுத்
தரையினிற் கிடக்கு மந்தச் சடாயுகண் டவட்கு நேர்ந்த
கருமமும் வழியிற் சொன்ன காதையும் பிறவுங் கூறி
விரைவினி லுடலம் விட்டான் வீரருந் தகனஞ் செய்தார்.

61 அங்குவன் திகழ்ச்சி செய்த வயோமுகி யென்னு நாம
மங்கையை யிளைய கோமான் வன்செவி நாசி கொய்தான்
தங்களை யெடுத்துச் சென்ற கவந்தனைத் தம்பி யோடு
புங்கவ னறுத்து வீழ்த்தா னவனுந்தே வுலகம் போனான்.

62 தேவுல கேகுங் காலைச் சீதையைத் தேட தற்குத்
தாவுசுக் கிரீவன் றன்னைச் சாருதி யென்று சொன்னான்
ஆவதுங் கேட்டார் பின்ன ரவ்விடம் விட்டுத் தென்பான்
மேவினர் சவரி வைகும் விரதவாச் சிரமஞ் சேர்ந்தார்.

63 சவரியாச் சிரமம் புக்குச் சவரிபூ சனையும் பெற்றுக்
கவலையி னோடுந் தென்பா லருஞ்சுரங் கடந்து சென்று
குவடுகள் பலவுஞ் சூழ்ந்து குலவுகிட் கிந்தை யென்னும்
புவிபுகழ் மலையிற் போந்து புலம்பொடு மிருந்தா ரன்றே.

---

## கிட்கிந்தாகாண்டம்.

---

64 சுக்கி ரீவ னனும னெனச்சொலும்
மிக்க வானர வீர ரிருவரும்
அக்கி ரிக்க ணிருந்தன ரடுபோர்
புக்கு வாலி பொருவலிக் கஞ்சியே.

65 இருந்த வானர வீர ரிருவருட்
டிருந்து மாருதி சேர்ந்த விருந்தரைத்
தெரிந்து மற்றவர் செய்கை முழுவதும்
பரிந்து கேட்க வவர்களும் பன்னினர்.

66 தொக்க மைந்தர்கள் சொல்லிய யாவையுஞ்
சுக்கி ரீவற்குச் சொல்லி யவனையும்
புக்கு மைந்தர்க ளோடு பொருத்தினன்
மிக்கு நண்பு வளர்ந்து விளங்கவே.

67 ஒருவர் செய்தி யொருவ ருணர்ந்திட
இருவர் தாமு மியம்பினர் வாலியைப்
பொருவ னென்றனன் புங்கவன் மற்றவன்
தருவ னென்றனன் றையலை நாடியே.

68 நாடும் வாலி வலிமையு நண்ணிப்போ
ராடித் தன்னை யுலைத்ததுந் தன்மனை

கூடுந் தேவியைக் கொண்டதுஞ் சீதையைத்
தேடி வந்தவர் தேற விளம்பினன்.

69 நிலங்கி டந்து நிமிர்ந்து மலையென
அலங்குந் துந்துபி யாக்கை யெலும்பினைக்
கலங்கி வந்தவர் கண்டிடக் காட்டினன்
துலங்கும் வெவ்வலி சோதனை செய்யவே.

70 கரிய கோமகன் காட்டித் தனக்குச்சுக்
கிரிவன் சொன்னதுங் கேட்டுத்தன் காற்பெரு
விரலி னெற்றினன் விண்ணெழுந் தம்மலை
ஒருக ணத்தினு ளோடிற்று நீளிடை.

71 பராரை மேவி யுயர்ந்து படைகளும்
விராவு தற்கருந் திண்மை விளங்கிய
மராம ரத்தொகை காட்டினன் மற்றவை
இராமன் பாணமொன் றேழுந் துளைத்ததே.

72 இந்த வீர ரிருவரு மெம்பகை
சிந்து வாரெனச் சிந்தை மகிழ்ந்திடும்
அந்த வீரரு மம்மையைத் தேடிட
வந்த வீரரு மம்மலை வைகினர்.

73 வருக போர்க்கென வாலியைத் தம்பிசுக்
கிரிவன் வீரங் கிளந்தறை கூவினன்
விரைவின் வாலியும் மேவ வவனொடும்
பொருத தம்பி புறங்கொடுத் தேகினன்.

74 ஏகும் வீர னிராமனொ டெண்ணியே
வாகை வாலியைப் பின்னும் வருகெனப்
போக வந்தவ னும்பொரப் புங்கவன்
வேக வாளி மறைந்து விடுத்தனன்.

75 விட்ட வாளி விரைந்துதன் மார்பகம்
பட்டு வாலி சுவர்க்கம் படர்ந்தனன்
கிட்டு மச்சுக் கிரீவன்கிட் கிந்தையிற்
பட்ட மெய்தி யரசியல் பற்றினன்.

76 சென்று வீர ரிருவருந் தென்றிசை
நின்ற மாலிய வானெனு நீண்மலை
துன்றி யீரிரு மாசந் தொலைத்தனர்
வென்றி வீரன் விளித்தனன் றம்பியை.

77 ஈட்ட வானர வேந்தனை யிவ்விடைக்
கூட்டி வாவெனக் கொற்றவன் கூறலும்
கேட்ட தம்பி யழைக்கக் கிளர்ந்தவன்
கூட்டி னத்தொ டிராமனைக் கூடினன்.

78 கூடும் வானரக் கோமகன் சீதையைத்
தேடும் வண்ணந் திசையொரு நான்கிலும்
ஓடும் வானர வீரரை யுய்த்தனன்
தேடு வீரெனுஞ் செம்ம லுரையினால்.

79 சீதை கண்டு தெளிந்து துணிந்திட
ஏத மற்ற விதனைக் கொடுவென
நாத னீந்திடு நல்விர லாழியும்
பேத நீங்கு மநுமனும் பெற்றனன்.

80 அநும னங்கத னாதியர் தென்றிசை
நணிபு குந்துசம் பாதி நவின்றிடும்
வனிதை வாய்மொழி வார்த்தையுங் கேட்டனர்
இனிது தென்கட லெல்லை மருவினர்.

81 மருவு தென்கடல் வாவி யிலங்கைபுக்
கரிவை செய்கை யறிந்துடன் வந்திட
ஒருவ ரேனு முடன்புட் டிலருளம்
வெருவி வானர வீரர் குழாத்துளே.

82 தற்பு கழ்ந்துரை சாம்பவன் கூறிடப்
பெற்ற மாருதி யோகை பெருகியே
பொற்பி னோடு பொலிந்து மகேந்திர
வெற்பி னுச்சியி லேறி விளங்கினன்.

# சுந்தரகாண்டம்.

83 அடல்பெருகு மாருதியு மம்மலையின் மீதெழுந்து
மிடல்பெருகு மைந்நாக மீதெழுந்து வருவதும்பார்த்
துடலொருவ வருமாக்கி யுயிரையுங்கொன் றவ்வழியே
கடலழுவந் தாவியிலங் காபுரியுங் கண்டனனே.

84 வாவியெழு மாருதியும் வழிமறிக்கு மிலங்கைமகா
தேவிதனை வலிதொலைத்துந் திறலரக்கர் நகரியிற்போய்ப்
பாவியிரா வணன்றுயிலும் பான்மையும்பார்த் தசோகமரக்
காவிலிருந் தொருவனிதை கலங்குவதுங் கண்டனனே.

85 இங்கிவளா ரெனவநுமா னிலைமறைக்கு மாக்கிளையில்
தங்கியிருந் துளமயிர்க்குஞ் சமயத்தி லிராவணனும்
மங்கையிடம் வந்தெனக்கு மனையவளா கெனவிரப்ப
அங்கவளுங் கடிந்துரைத்தா ளவனுமகன் றேகினனே.

86 பாதபத்தின் மிசையிருந்தோன் பலவாறு புலம்புகின்றாள்
சீதையென நிச்சயித்துச் சிந்தைமகிழ்ந் தனிமையிற்போய்க்
காதலன்றன் செய்கையெலாங் கட்டுரைத்துத் தான்கொணர்ந்த
மோதிரமு மவளிடத்தின் முறைநின்று கொடுத்தனனே.

87 நலங்கிளரு மோதிரத்தை நாதனணி யீதெனவே
கலங்கிமனம் வெய்துயிர்த்துக் காதலனைப் பிரிந்துநின்ற
பொலங்கொடியு மிங்கிதனைப் புங்கவன்பாற் கொடுத்தியென
அலங்கியசூ டாமணியை யநுமனிடங் கொடுத்தனளே.

88 சூடைமணி தனைப்பெற்றுத் தூதனெனு மனுமானும்
பீடையினிக் கொளவேண்டாம் பெண்ணணங்கே வெம்போரிற்
கேடுசெயு மிராவணனைக் கிளையோடு முடிவெய்தச்
சாடியுனை யும்மழைத்துத் தன்னகரஞ் செல்லுவனே.

89 என்றுசொலி யநுமானு மவ்விடம்விட் டேகியயல்
நின்றபொழி லிறுத்தழித்து நேர்ந்தவக்கன் முதலாகத்
துன்றியதொல் லரக்கர்குலந் தொலைந்தொழியக் கொன்றழித்துக்
குன்றியவிந் திரசித்துக் கட்டிடவும் பெற்றனனே.

90 கட்டுடனே மாருதியைக் கைக்கொடுபோ யிராவணன்முன்
விட்டிடலு மபவாதம் வெறுத்துரைத்த ராவணற்குப்
பட்டமுறுந் தசரதனார் பாலகன்றன் பெருமையெலாங்
கட்டுரைத்துத் தன்வலியுங் கலங்காது காட்டினனே.

91 தோல்வியுறு மரக்கரெலாஞ் சூழ்ந்தனுமன் வாலினிடைச்
சீலைபல பந்தமுறச் செய்துதயி லமும்விட்டு
வாலெரிகவெனக்கொளுத்த வளர்நெருப்போ டெங்கணும்போய்க்
கோலவிலங் காபுரியைக் கொளுத்திமுற்ற வெரித்தனனே.

92 கலங்கவெரி கொளுத்தியபின் கடல்கடந்து வானரத்தின்
குலங்களைச்சேர்ந் தவற்றினொடுங் கொம்மெனரா மனையணுகி
இலங்கைநக ரிடைநிகழ்ந்த செய்கையெலா மியம்பியபின்
அலங்கியசூ டாமணியு மவன்கரத்தி னீந்தனனே.

93 புக்கிலங்கை நகரியிடைப் பூரியன்மேற் பொரல்கருதிச்
சுக்கிரிவன் முதலாகச் சொல்லியவா னரங்களொடும்
மிக்கதச ரதன்புரிந்த விழுமியமா தவப்புதல்வன்
தெற்கிலுறும் பெருங்கடலின் றிரைக்கரையைக் கண்டனனே.

94 முன்னவனோ டும்பகைத்து முதுணர்ந்த வீடணனும்
பின்னவனுஞ் செயராம பிரானருகில் வந்தணைந்தான்
அன்னவனை யினியிலங்கைக் காசாக வபிடேகஞ்
சொன்னமுறை யாற்புரிந்து தூயவனும் வைத்தனனே.

95 ஆயபெருங் கடற்கிடையே யணையென்னுஞ் சேதுவினை
நாயகனு கியாம னளனைக்கொண் டாற்றுவித்துப்
பாயுநெடு வானராம் படைகளொடு மவ்வழியே
தீயர்செறிந் திடுமிலங்கைச் சுவேலமலை சேர்ந்தனனே.

# யுத்தகாண்டம்.

96 பின்னி ராகவன் பணித்திடப் பெருவலி யமைந்து
முன்னர் நின்றிடு நீலனை முதலவா னரர்கள்
இந்நி லஞ்செறி கல்லொடு மரங்களை யெடுத்து
முன்ன ரேகியே யிலங்கையை முற்றுகை செய்து.

97 தீய ராவணன் பணியினாற் போரிடைச் சேர்ந்த
மாய வனபிர கத்தனை மற்றுளார் தம்மைக்
காயம் விட்டிடப் பொருதனர் கடுந்திற லரிமா
மேய வன்மையுங் காட்டினர் வீரமேல் கொண்டு.

98 சுக்கி ரீவனு மநுமனு மாராமரந் துளைத்த
அக்கு மாரனுந் தம்பியு மமரிடை வந்து
புக்க வெந்திற லரக்கரை வேரொடும் போக்கி
மிக்க வீரமுங் காட்டினர் தேவர்கள் வியப்ப.

99 அன்ன போதினி லிந்திர சித்தெனு மடலோன்
மன்னன் மைந்தரா மிராமலக் குவர்களை வன்மை
துன்னு நாகபா சத்தினாற் பிணித்தனன் றொடர்ந்து
பன்ன காரிவந் ததன்வலி தொலைத்தனன் பறக்க.

100 சம்பு வெள்ளியம் பொருப்பினை யெடுத்தவன் சலியா
தம்பு வில்லிடைப் பூட்டியே யமரிடை யெதிர்த்துத்
தும்பை சூடிய ராகவன் பொருதிடத் தொலைந்து
கும்ப கன்னனைத் துயிலெடுத் தேவினன் கொதித்து.

101 பன்னும் போரினி லரக்கர்கள் பலரொடும் வந்து
துன்னி வானர வீரரைத் தொலைத்துணுங் கும்ப
கன்ன னாருயிர் நீங்கிடக் கடிதினிற் றொலைத்தான்
முன்னம் வாலியை மார்பகந் துளைத்திடு முதல்வன்.

102 தீய விந்திர சித்துபின் போரிடைச் சேர்ந்து
சேய தாமரை யாசனன் படையினைச் செலுத்தித்
தூய ராமனைத் தம்பியை வானரத் தொகையை
மாய மாகவே மயக்கின னறிவெலா மாள.

103 சண்ட வாயுவின் றிருமகன் வடதிசை சார்ந்து
கொண்டல் சேர்வுறு மருத்துமா மலையினைக் கொணர்ந்து
மண்டு மோகநீத் தவரெலாம் வாழ்ந்திடச் செய்து
பண்டு போலவம் மலையையும் வைத்தனன் படர்ந்து.

104 இந்நி லத்தினி னிகும்பலை யெனுமிடங் குறுகிப்
பன்னும் வேள்வியொன் றுற்றின னிந்திரன் பகைவன்
சொன்ன வீடணன் றன்னொடுஞ் சுமித்திரை மைந்தன்
அன்ன வேள்வியை யழித்தபின் னவனையு மழித்தான்.

105 வேட்ட வேள்விபோய் மைந்தனும் விளிந்திடுஞ் செய்தி
கேட்டி ராவணன் கோபதா பத்தொடுங் கிளர்ந்து
தீட்டும் வெஞ்சரஞ் செலுத்திவா னரங்களை வருத்திப்
பூட்டும் வார்சிலை பிராமனோ டருஞ்சமர் புரிந்தான்.

106 வெருவும் போர்பல விராமனும் வியந்திட வாற்றிப்
பிரமன் வெம்படை விட்டிரா வணன்முடி பிறங்குஞ்
சிரமெ லாமறுத் தொழித்தனன் செயசெய வென்றே
விரியும் பூமழை விண்ணவர் சொரிந்தனர் வியந்து.

107 அரக்கர் தங்களுக் கரசனா யமர்ந்துதென் னிலங்கை
புரக்க வீடணன் றனைவிடுத் தெரியுளே புகுந்து
பொருக்கெ னச்சுசி யெய்தியே புறம்வருஞ் சனகன்
திருக்கு மாரியை யழைத்தன னிராமனுஞ் சேர்ந்து.

108 ஐய னிந்திரன் வரத்தினா லவ்விடை நிகழ்ந்த
வெய்ய போரினி லிறந்திடும் வானர வீரர்
உய்யு மாறெடுத் தவரெலா முவந்திடச் செய்தான்
செய்யவாகிய பொருள்பல சிறப்பொடும் வழங்கி.

109 மாது தன்னொடு மிலக்குவன் றன்னொடும் வானிற்
போதும் புட்பக மேறிமுன் னநுமனைப் போக்கித்
தீதில் வீடணன் றன்னொடும் வானரர் சேர
நாத னேகினன் விரைவினி லயோத்தியை நாடி.

110 அநுமன் சொல்லினாற் பரதன்றன் செய்தியு மறிந்து
தனைய ழைத்திட வந்தவர் தம்மொடுஞ் சார்ந்து
குனியும் வில்லுடை ராகவன் கோதறு முனிவர்
புனையும் வேடநீத் தணிமதி லயோத்தியிற் புக்கான்.

111 குருவ சிட்டனும் பிறரும்வந் திராமனைக் குறுகி
அரசு செய்கென வணிமுடி சூட்டின ரவனும்
விரியும் வெண்குடை நிழற்றியே மேதினி புரந்தான்
அரிவை தன்னொடு மயோத்திமா நகரினி லமர்ந்து.

---

## உத்தரகாண்டம்.

---

112 கலக மாற்றிய ராவணன் கவர்ந்துகொண் டகன்ற
திலக வாணுதன் மனைவியைச் சேர்த்தன னென்றே
உலகம் பேசிய பழிமொழிக் குள்ளக நாணி
விலக நீக்கினன் சீதையை யிராமனும் வெறுத்து.

113 விலக்குஞ் சீதையைக் காட்டினிற் கொண்டுபோய் விரைவில்
இலக்கு வன்விட வெதிர்ந்துவான் மீகிமா முனிவன்
குலக்க ருந்தவ மேவுமாச் சிரமத்திற் கொடுபோய்
அலக்க ணீங்கிட விருத்தியா தரித்தன னவளை.

114 மெய்த்த போதனர் வேண்டிட ராமனும் விரைந்து
சத்து ருக்கனை யேவினன் சாடுமா றவனும்
யுத்த மேவியே யிலவண னுயிரினைச் சாடி
அத்த போதனர் குழுவினை யன்பொடுங் காத்தான்.

115 சனகி போன்றவோர் வடிவினைச் செந்நிறந் தயங்கும்
கனக மேகொடு செய்துவைத் தருமகங் கண்ட
அனக னச்சுத னிராமன்பா லன்பொடுங் கொடுபோய்ச்
சனகி தன்னையுங் கொடுத்தனன் றவப்பெரு முதல்வன்.

116 அன்ன நாயக னெஞ்சக மயிர்த்திட நின்ற
பன்னி பூமகள் சீதையும் பரிவொடு வேண்ட
அன்னை யாகிய நிலமக ளளித்திடுந் துவாரம்
தன்னி லின்பொடும் புகுந்தனள் கற்பிய றயங்க

117 வண்ண வார்சிலை முரித்தவ னாணையின் வழியே
தண்ண றும்புனற் சரயுவென் றிருநிலம் புகலும்
அண்ணன் மாநதி முழுகியே யாக்கையும் விடுத்து
விண்ண டைந்தனர் வானர வீரரு மாதோ.

118 பரதனொடுசத் துருக்கனும் பழையதம் வடிவம்
மருவி வைகினன் மாநுட வடிவினை விடுத்து
வரத சின்மய ராமனும் வைகுந்தநி லயம்
விரவி யாருயிர் புரந்துவீற் றிருந்தனன் மாதோ.

வாழி யந்தணர் மன்னவர் பின்னுளோர் மறைகள்
வாழி மாமுகி லறநெறி வைதிக சைவம்
வாழி செந்தமி ழிலக்கிய லக்கண வரம்பு
வாழி ராகவன் பெருங்கதை மாநிலத் தினிதே.

முற்றிற்று.

# அருஞ்சொற்பொருள்.

அக்கன் – இராவணன்மக்களுள் ஒருவன்.
அங்கி–அக்கினி.
அச்சுதன்–விட்டுணு
அடல்–வலி.
அதிதிபூசனை–விருந்தோம்பல்.
அநகன்–பாவமிலி.
அநுசன்–தம்பி.
அபவாதம்–இழிமொழி.
அபிடேகம்–மஞ்சனம்.
அம்மை–தாய்.
அயன்–பிரமா.
அயிர்த்தல்–ஐயமுறுதல்.
அரிமா–சிங்கம்.
அரிவை–பெண்.
அலங்கல்–விளங்கல்.
அவி–தேவருண்.
அழுவம்–பரப்பு.
அறைகூவல்–பொரவழைத்தல்.
ஆக்கை–உடம்பு.
ஆச்சிரமம்–முனிவரிருக்கை.
ஆடுதல்–அடுதல்.
ஆதி–முதல்.
ஆழி–மோதிரம்.
இகல்–வலி.
இகலல்–பகைத்தல்.
இந்திரசித்து–இராவணனுடையமூத்தமகன்.
இராகவன்–இராமன்.
இளவல்–பின்னோன்.
இளையகோ–இளவரசன்.
இன்னல்–துன்பம்.
உடலம்–உடம்பு.
உதந்தம்–சரித்திரம்.
உம்பர்–உவ்விடம்.
உறுத்தல்–பொறுத்தல்.
எடுத்தல்–எழுப்பல்.
ஏசு–குற்றம்.
ஏய்தல்–பொருந்தல்.
ஐயன்–அப்பன்.
ஓன்றல்–பொருந்தல்.
ஓகை–மகிழ்ச்சி.
ஓடம்–வள்ளம்.
கங்குல்–இரா.
கடிதல்–தள்ளல்.
கரியவன்–இராமன்.
கலகம்–சண்டை.
கன்றல்–அடிப்படல்.
கனகம்–பொன்.
கா–சோலை.
காதுதல்–கொல்லல்.
காயம்–சரீரம்.
கானம்–நாடு.
கிரி–மலை.
கிளர்தல்–எழுதல்.
குகன்–ஒரு வேடன்.
குடமுனி–அகத்தியர்.
கும்பம்–குடம்.
குவடு–மலையினுச்சி.
கூறு–பங்கு.
கூனி–கைகேயியினுடைய ஏவலாட்டி.
கேதம்–நடுக்கம்
கையன்–கீழ்மகன்.
கொற்றவன்–அரசன்.
கோசிகன்–விசுவாமித்திரன்.
கோது–குற்றம்.
கோலம்–அழகு.
கோன்–அரசன்.
சட்டகம்–உடம்பு.
சம்பு–சிவன்.
சரம்–அம்பு.
சனகி–சீதை.
சாடுதல்–கொல்லல்.
சான்று–சாட்சி.
சானகி–சீதை.
சிந்தை–மனம்.
சிரம்–தலை.
சின்மயன்–ஞானரூபி.
சீதை–இராமபிரான்மனைவி.
சு–சுத்தம்.
சுரம்–காடு.
சுவர்க்கம்–தேவலகம்

சுவேலம்-இலங்கையிலுள்ள ஒரு மலை.
சூடைமணி-சூடாமணி.
செம்மல்-தலைவன்.
செயம்-வெற்றி.
செவி-காது.
சோகம்-துயர்.
தகனம்-சுடுதல்.
தசரதன்-அயோத்தியில் இருந்த ஓரரசன். பத்துத்திசையிலுஞ் செல்லுந் தேருடையவன் என்பதுபற்றிவந்த பெயர்.
தண்டகாரணியம்-தண்டகன் என்பவனுடைய நாடாயிருந்து சுக்கிரசாபத்தாற் காடான இடம்.
தராதலம்-பூமி.
தரு-மரம்.
தலைநாள்-முன்னாள்.
தாமரையாசனன்-பிரமன்.
தாபம்-வெம்மை.
தாவுதல்-பாய்தல்.
திண்மை-கலங்காநிலை.
திலகம்-பொட்டு.
தையல்-பெண்.
தைலம்-எண்ணெய்.
நளன்-தேவதச்சன்.
நாகம்-பாம்பு.
நாசி-மூக்கு.
நாதன்-தலைவன்.
நான்முகன்-பிரமன்.
நிமிர்தல்-எழுதல்.
நேயம்-விருப்பம்.
படர்தல்-போதல்.
பந்தம்-கட்டு.
பராரை-பருத்தவரை.
பன்னகாரி-கருடன்.
பன்னசாலை-முனிவர்வாசம்.
பாசம்-கயிறு.
பாதவம்-மரம்.
பாதுகை-மிதியடி.
பாடு-பெருமை.
பாணம்-அம்பு.
பாலகன்-மகன்.
பாவகாரி-பாவஞ்செய்தவன்.
புங்கவன்-சிரேட்டன்.
பூசனை-பூசை.
பூபதி-அரசன்.
பூரியன்-கீழ்மகன்.
பேணல்-காத்தல்.
பேதம்-வேறுபாடு.
பொழில்-சோலை.
மகம்-வேள்வி.
மகிதலம்-பூமி.
மதலை-மகன்.
மணம்-விவாகம்.
மயன்-அசுரதச்சன்.
மாணுதல்-சிறத்தல்.
மாது-பெண்.
மாயம்-வஞ்சகம்.
மாருதி-அநுமான்.
மிசை-மேல்.
மிடல்-வலி.
மீது-மேல்.
முற்றுகை-வளைத்தல்.
மூது-முதுமை.
மோகம்-மயக்கம்.
வயம்-வலி.
வலாரி-இந்திரன்.
வன்மிகம்-புற்று.
வனம்-காடு.
வனிதை-பெண்.
வாகை-வெற்றி.
வாசவன்-இந்திரன்.
வாஞ்சை-ஆசை.
வாவுதல்-பாய்தல்.
வானரம்-குரங்கு.
வித்தை-கல்வி.
விராவல்-கலத்தல்.
விளித்தல்-அழைத்தல், அழித்தல்.
வினிதை-அயோத்தி.
வீடணன்-விபீடணன்.
வென்றி-வெற்றி.
வெற்பு-மலை.
வேதியர்-பிராமணர்
வையம்-தேர்.